# அண்ணா, கலைஞர் வழியில் நம் முதல்வர்!



இந்தியாவை என்றுமே பகைநாடாக பார்க்கும் பாகிஸ்தான் தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளையும் தொடர்ச்சியாக ஊக்குவித்து இந்தியாவிற்கு எதிராக செயல்பட வைத்ததின் விளைவு இன்றைக்கு பாகிஸ்தான் செயலால் தேவையான போராக தொடங்கியுள்ளது.

இதன் முடிவு என்னவாகும் என்று தெளிவாக தெரிந்தாலும் இந்தியா எடுக்கும் நடவடிக்கையை தீவிரவாதத்தை வேரறுக்க விரும்பும் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா உட்பட பல நாடுகளும் ஏன் அரபு தேசத்து நாடுகளும் ஆதரிக்கவே செய்துள்ளன. சீனா, துருக்கி போன்ற நாடுகள் மறைமுகமாக பாகிஸ்தானுக்கு ஆதரவு தருவதாக சந்தேகிக்கப்படுகிறது.

புல்வாமா தாக்குதல், கல்வான் பள்ளத்தாக்கு தாக்குதல், பாராளுமன்றத்தின் மீது தாக்குதல், மும்பை தாக்குதல் என்று தொடர்ந்து பல தாக்குதல்களை தீவிரவாதிகள் நடத்தியது அனைவரும் அறிந்த ஒன்று என்றாலும் அந்தத் தீவிரவாதிகள் பயிற்சி எடுத்த இடங்கள் அவர்களது முகாம்கள் இருக்கும் இடங்கள் பாகிஸ்தானில் தான் உள்ளன.


இதனைத் தண்டிக்க வேண்டிய கடமையுள்ள பாகிஸ்தான் எப்படியாவது இந்தியா சீர்குலைக்கப்பட்டால் போதும் என்ற அடிப்படையில் தீவிரவாதிகளை ஆதரித்துத்தான் வந்துள்ளது. அப்படிப்பட்ட நிலையில்தான் சமீபத்தில் பஹல்காமில் காஷ்மீருக்கு சுற்றுலா சென்றிருந்த நம் அப்பாவி மக்கள் 26 பேர் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்திய மக்கள் அனைவரின் இதயமும் இந்தச் செய்தி அறிந்து வேதனையில் வெந்துப் போனது. துன்பத்தில் துவண்டு போனது. தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களும் தமிழக மக்களும் பெரும் வேதனைக்கு ஆளானார்கள். நல்லவேளை தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் சில நிமிடங்கள் காலதாமதமாக பஹல்காம் சென்றதால் தாக்குதலிருந்து தப்பிப் பிழைத்துள்ளனர்.

1962ல் இந்தியாவுடன் சீனா போர் தொடுத்த போது இந்திய வீரர்கள் சிலர் வீரம் செறிந்த விதையாகிப் போனார்கள். அவர்கள் இன்றும் வரலாற்றில் வாழ்கிறார்கள். எந்த ஒரு போரிலும் இந்திய வீரர்கள் களத்தில் போராடி மாண்டார்கள் என்றால் அதில் தமிழக வீரர்கள் பலர் இருக்கத்தான் செய்வார்கள்.

நம் சங்க இலக்கியமாம் புறநானூறு தந்தையையும், கணவனையும் போரில் இழந்த பின்னும் தன் பிஞ்சு மகன் கரத்தில் வேலும் அம்பும் கொடுத்து சென்று வா மகனே! களத்தில் வென்று வா மகனே! என்று முத்தமிட்டு அனுப்பியதும் அந்தப் போரில் உன் மகன் முதுகில் அம்பு பாய்ந்து மாய்ந்து விட்டான் என்று ஒரு அற்பன் அல்ல! அல்ல! புல்லன் கூற என் மகனா! புறமுதுகா! இதோ அறுத்தெறிகிறேன் அவன் பால்குடித்த என் மார்பகத்தை என்று கிளர்ந்தெழுந்து போர்க்களம் சென்று தன் மகனை காண அவனோ மார்பில் அம்பு பாய்ந்து மரணித்து கிடந்த காட்சி கண்டு பெருமைப்பட்டாள் தமிழ் மறத்தி என்று கூறுகிறது.

ஏன் இதனைக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் களம் காண அஞ்சாதவர்கள் தமிழர்கள் என்றும் இந்திய தேசத்தையை ஆண்டவர்கள் தமிழர்கள் என்றும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவர்கள் தமிழர்கள் என்றும் கிரேக்கத்தோடும் ரோமோடும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வர்த்தகம் புரிந்தவர்கள் தமிழர்கள் என்றும் உலக சரித்திரம் என்ற தனது நூலிலில் ஜவஹர்லால் நேருவும், அதேபோல் தனது நூலிலில் அண்ணல் அம்பேத்கரும் குறிப்பிட்டு ள்ளனர்.



**வி.பி.கலைராஜன்,**
கழக இலக்கிய
அணி செயலாளர்

துஷ்டனுக்குத் துதிபாடுவதும், துரோ கத்திற்குத் துணை போவதும், ஆபத்தைக் கண்டு அய்யய்யோ என்று அலறுவதும், போர்க்களம் என்றால் புறமுதுகு காட்டுவதும், அக்கிரமக்காரர்களுக்கு ஆலாவனைச் செய்வதும், வஞ்சகர்களுக்கு வாழ்த்துப்பா பாடுவதும் தமிழ்த் தாய் பால் அருந்திய எந்த சுத்த தமிழனும் அறியாதது. ஒரு வேளை அப்படிப்பட்டவர்கள் சிலர் இருப்பின் அவர்கள் எட்டப்பர்களாத் தான் இன்றும் வரலாற்றில் இருக்கிறார்கள்.

தனது தலையாயக் கொள்கையாக அறிஞர் அண்ணா நினைத்தது திராவிட நாடு திராவிடர்கே என்பதாகும். ஆனால் அதைவிட ஒரு படி மேலே போய் தனது கடைசி கூட்டத்திலும் 95வது வயதிலும் தியாகராய நகரில் திராவிட இயக்க சாக்ரடீஸ் தந்தை பெரியார் தமிழ்நாடு தமிழர்க்கே என்று முழங்கினார். மத்தியில் இருந்தவர்கள் யாரும் அவர் பாதம்பட்ட மண்ணைக் கூடத் தொடமுன்வரவில்லை. ஏனென்றால் பெரியார் என்றால் நெருப்பு.

ஆனால் யாரையும் அதட்டிக் கூட பேசத் தெரியாத பெருந்தகை அறிவின் இருப்பிடம், சிந்தனை ஊற்று, தலைவர் கலைஞர் கடைசி மூச்சு நிற்கும் வரை உச்சரித்த பெயர் அறிஞர் அண்ணா. அவர் சீனா யுத்தம் நடந்த போது "வீடு இருந்தால் தான் நாம் ஓடுமாற்ற முடியும், நாடிருந்தால் தான் கட்சி நடத்த முடியும்" "நம் நாடு சிறியது நமது வரலாறு புகழ்மிக்கது" எனவே நமக்கு முதலில் நாடு தான் முக்கியம் என்று அறிவித்து தனது திராவிடநாடு கோரிக்கையைக் கைவிடுகிறேன். ஆனால் அதற்கான காரணம் அப்படியே இருக்கிறது என்று அறிவித்தார். அது மட்டுமல்ல ஒரு மணி நேரத்திற்குள் 35000 ரூபாய் வசூலித்து அன்றைய முதல்வர் காமராஜரிடம் யுத்த நிதியாக கொடுத்தார். அதிலில்லாமல் அண்ணாவை பின்பற்றி கழகத்தினர் லட்சத்திற்கு மேல் நிதி கொடுத்தார்கள். அன்றைக்கு சுமார் ஒன்றரை லட்சம் என்பது இன்றைக்கு பத்து கோடிக்கு சமம். அந்த அருமைமிகு அண்ணா பாராளுமன்றத்தில் பேசும் போது பிரிவினைவாதம் பேசுகிறார் என்றவர்கள் பின் அவரது செயலால் வாயடைத்துப் போனார்கள்.

இதேபோல் இந்தியா பாகிஸ்தான் போர் வங்காளதேசம் உருவாவதற்கு முன்பு நடந்த போது அன்றைய பிரதமராக இருந்தவர் இந்திராகாந்தி அம்மையார். அப்போது தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். 1971 நடந்த தேர்தலின் போது தி.மு.க வென்ற இடங்கள் மட்டும் 184. இந்த சாதனை வெற்றியை இதுவரை யாராலும் வெல்ல முடியவில்லை. (இது இளைஞர்கள் தெரிந்து கொள்ள எழுதப்பட்டது)

அந்தப் போரில் 2009ல் ஈழத் தமிழர்கள் பல லட்சம் பேரை கொன்று பசிதீர்த்துக் கொண்ட இலங்கை அரசு பாகிஸ்தான் விமானங்கள் பெட்ரோல் நிரப்பிக் கொள்ள தனது நாட்டை பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தது. என்றைக்குமே இலங்கை தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்தியர்களுக்கே எதிரான நாடாகவும் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆதரவு நாடாகவுமே இருந்து வந்துள்ளது. தமிழக மீனவர்கள் இன்றும் தாக்கப்படுகிறார்கள்.

அந்தப் போர் ஒரு மாதத்திற்கு மேல் நடந்தாலும் 60000க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் வீரர்கள் இந்திய ராணுவத்திடம் சரண் அடைந்தனர். வங்காளதேசம் என்கிற நாட்டை உருவாக்கி தந்தது இந்தியா. அப்படிப்பட்ட போரில் தி.மு.க அரசின் சார்பாக 6 கோடி ரூபாயை யுத்த நிவாரண நிதியாக பிரதமரிடம் வழங்கியவர் தலைவர் கலைஞர் ஆவார். அன்றைக்கு அதிக நிதி கொடுத்த மாநிலம் தமிழ்நாடு தான். இன்றைய அதன் மதிப்பு கிட்ட தட்ட 100 கோடி ஆகும். மாநில சுயாட்சி தி.மு.க கேட்கலாமா இது பிரிவினைவாத மில்லையா என்று அன்றும் சிலர் பேசினார்கள். தலைவர் கலைஞர் என்ன பிரிவினை வாதியா?

அதேபோல் பிரதமராக வாஜ்பாய் இருந்த போது தமிழகத்தின் முதல்வராக 1999ல் இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார். பாகிஸ்தான் எல்லை மீறி கடும் தாக்குதல் புரிந்தது. அந்நாட்டிற்கு சீனா மறைமுக ஆதரவும், ஆயுதங்களும் அளித்தது இருந்தாலும் அப்போரிலும் இறுதியில் இந்தியாவே வெற்றி பெற்றது.

அந்தப் போருக்கான நிதியாக தலைவர் கலைஞர் 50 கோடியை பிரதமர் வாஜ்பாயிடம் தந்தார். இந்தியாவில் இருந்த மற்ற மாநிலங்களெல்லாம் வழங்கிய நிதியோ வெறும் 25 கோடி தான். அன்றைக்கு ஆளுகிற ஒன்றிய அரசு யார் என்று கலைஞர் அவர்கள் பார்க்கவில்லை. தமிழ்நாட்டின் சார்பாக இந்திய நாடுதான் முக்கியமென நிதி 50 கோடியை அள்ளித் தந்தார். இன்று வாயாடும் பா.ஜ.க வினருக்கு இது தெரியுமா?

அதேபோல் இன்று பிரதமர் மோடி தீவிரவாதத்தை ஒழித்திட இந்திய அப்பாவி மக்களைக் காத்திட முடிவெடுத்து இந்த ஆபரேஷன் சிந்தூர் போரை நடத்தி வருகிறார். இந்த யுத்தத்தின் போதும் தமிழக ஆட்சியில் இருப்பது தி.மு.க தான். முதல்வர் அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான்.

நாட்டிற்கு ஆபத்து வரும்போதெல்லாம் ஒன்றிய அரசிற்கு ஆதரவு கரம் நீட்டி வருவது தி.மு.க தான். அறிஞர் அண்ணா முதல்வராக அப்போது இல்லையென்றாலும் தமிழகத்தின் அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக தி.மு.கவும் அதன் தலைவராக அறிஞர் அண்ணாவும் இருந்துள்ளார். அதன் பின்பு 1971 போர் சமயத்திலும் 1999 கார்கில் யுத்தத்தின் போதும் தி.மு.க ஆட்சியில் அமர்ந்து ஒன்றிய அரசுக்கு முழு ஆதரவு தந்ததோடு அதிக நிதியும் தந்தவராக முத்தமிழறிஞர் கலைஞரே இருந்துள்ளார். அதேபோல் தற்போது தொடங்கியுள்ள இந்தியா பாகிஸ்தான் போரின் போதும் தி.மு.க அரசே இருந்து முதன் முதலாக யுத்தத்திற்கு முழு ஆதரவு தருவேன் என்று அறிவித்தவர் நம்முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே! என்னே ஒற்றுமை!

இந்திய நாட்டிற்கு ஆபத்து வரும்போதெல்லாம் காக்கின்ற கடமையுள்ள கட்சி மற்றும் ஆட்சியாக இருப்பது தி.மு.க தான். அப்படித்தான் நம்முதல்வர் அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வடிவில் இன்றிருந்து ஆதரவு தருகிறார்.

ஒன்றிய அரசு எத்தனையோ அடக்குமுறைகளை தி.மு.க அரசுக்கு எதிராக ஏவி வருவதோடு தரவேண்டிய நிதியைக் கூட தரமறுத்து தமிழக மக்களை மாற்றான் நாட்டு மக்களாக எண்ணி வஞ்சிக்கும் போதும் நம் இந்தியாவிற்கு ஒரு தீங்கென்றால் தமிழ்நாடு உறுதியாக துணை நிற்கும் என்பதை நம்முதல்வர் காட்டியுள்ளார்.

அதேபோல் பெண்ணுக்கு கல்வி வேண்டும், சொத்து வேண்டுமென்றார் தந்தை பெரியார். சொன்னது 1929 மாநாட்டில், அதனை 1989 ஆட்சியில் அமர்ந்தவுடன் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு என்று அறிவித்தார் தலைவர் கலைஞர். அதே போல் உயர் கல்வி மட்டுமல்ல கல்வியறியா பெண்களே தமிழ்நாட்டில் இருக்க கூடாதென்று புதுமைப்பெண் திட்டம் மூலம் மாணவிகளுக்கு 1000 ரூபாய் வழங்கி ஊக்கப்படுத்துவதோடு இல்லம் தேடி கல்வி, பசியின்றிப் பிள்ளைகள் படிக்க வேண்டி உலக நாடுகள் தமிழகத்தைப் பார்த்துப் பின்பற்றும் காலை உணவுத் திட்டத்தையும் தந்துள்ளார் நம்முதல்வர் அண்ணன் தளபதி. கல்வி கற்கா பெண்களே இனி தமிழகத்தில் இருக்க மாட்டார்கள்.

ஏன் இதனை குறிப்பிடுகிறேனென்றால் இந்தப் போரில் தலைமையேற்று நடத்தியவர்கள் இரண்டு பெண்கள். ஒருவர் கர்னல் சோபியா குரோஷியா, மற்றொருவர் மியோமிகா சிங், இருவரும் நான்றாகப் படித்தவர்கள். தந்தை பெரியார் 1925 லிருந்து பெண் கல்வி கேட்டார். பெண்களால் அனைத்தும் முடியுமென்றார். இந்தியாவில் இப்படி அழுத்தி பெண் கல்விக்காக குரல் கொடுத்த தலைவர் தந்தை பெரியார் தான். அதனை தலைவர் கலைஞர் அவர்களும் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் நிறைவேற்றினார்கள்.

இதேபோல் சில வருடத்திற்கு முன்பு ஒரு மல்யுத்தப் போட்டியில் பாகிஸ்தான் பெண் அனைவரையும் வீழ்த்தி விட்டு இந்தியாவைச் சேர்ந்த யாராவது ஒரு பெண் துணிவிருந்தால் வாருங்கள் என்று அழைக்க ஒரு வீரத் தமிழ்ப் பெண் எழுந்துச் சென்று ஒரே நிமிடத்தில் அந்த திமிர் பிடித்த பாகிஸ்தான் பெண்ணை அடித்து வீழ்த்தியதை தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டது. ஒரு வேலுநாச்சியார் அல்ல இவரைப் போல் பல வேலுநாச்சியார்கள் தான் தமிழ்ப் பெண்மணிகள். தமிழ் பெண்களின் வீரத்திற்காக இதைக் குறிப்பிட்டுள்ளோம்.

பெண்களை காவல்துறையில் சேர்த்து புரட்சி செய்தவரும் கலைஞர் அவர்கள் தான். அதேபோல் சிறந்த பெண் காவல் அதிகாரிக்கு ஊக்கப்பரிசு தந்து உற்சாகப்படுத்தியவர் அண்ணன் நம் முதல்வர் தளபதி அவர்கள் தான்.

திராவிட இயக்கத் தலைவர்களின் சிந்தனையின் விளைவு தான் இன்று இந்திய ராணுவத்தில் தலைமை தளபதிகளாக பெண்கள் சாதித்துக் காட்டி வருகின்றனர். தி.மு.கவினர் பிரிவினைவாதிகள் என்று கூறும் பித்தர்களே இப்போதாவது தெரிகிறதா தி.மு.கவினரும் அதன் தலைவர்களும் என்றென்றும் நாட்டுப் பற்றாளர்கள் என்பது.

**கலைகள்யாவும் கற்றறிந்த**
**காளையர்வாழும் தமிழ்நாடு!**
**பீரங்கியென்ன போரேவரினும்**
**புறப்படத்துணிந்தது தமிழ்நாடு!**





சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. ஜே.ஜே.எபினேசர் முன்னிலை வகித்தார்.கூட்டத்தில் அத்திப்பட்டு சாம்ராஜ், இளம் பேச்சாளர் செ.ஜோதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினர்., எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், .வி.லோகேஷ்,ஆர். வெற்றிவீரன் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், குமாரி நாகராஜ் எம்.சி, தேவிகதிரேசன் எம்.சி, மணிமேகலை ஏழுமலை எம்.சி, மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் அனைத்து வட்ட நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

## கழக அரசின் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### செஞ்சி மஸ்தான் - தாம்பரம் ஏகாம்பரம் - ராஜாராம் சிறப்புரை!

*திண்டிவனம் மே 11.*

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் வடம் பூண்டி பெரப்பேரியில்நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.,தலைமை கழக பேச்சாளர் தாம்பரம் ஏகாம்பரம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர்மேற்கு ஒன்றிய திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் வடம் பூண்டி பெரப் பேரிகலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய துணை பெருந்தலைவர் ராஜாராம் தலைமை தாங்கினார்.ஒன்றிய நிர்வாகிகள் அமராவதி, சுப்பிரமணி, ஆர்.காளி,அன்பரசி ஜெயபிரகாஷ் திருஞானசம்பந்தம் அரிகிருஷ்ணன், கே .காளி, மணி, முன்னால் ஊராட்சி மன்ற தலைவர்கள்சுப்பிரமணி இளங்கோவன் முன்னாள் கிளை செயலாளர் சாமுவேல் கிளை செயலாளர் கமலேஷ் விநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் கிளை செயலாளர்கள்ஜெகன், சேட்டு ஆகியோர் அனைவரும் வரவேற்றனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் தாம்பரம் பி.வி.ஏகாம்பரம் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு கழக ஆட்சியின் நான்கு ஆண்டு சாதனைகளை எடுத்துரைத்தனர். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் ,மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மனோ சித்ரா ராஜேஸ்வரன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் அண்ணாதுரை, துணை அமைப்பாளர் மாரி முத்து ,முன்னாள் மாவட்ட இலக்கிய அணி தலைவர் குமரவேலன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் நெடுஞ்செழியன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஹேமநாதன், லோகேஷ், தினேஷ்குமார், சக்திவேல், மணிகண்டன், சுர்ஜித், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பணி நிர்வாகிகள் பார்த்திபன், குணவேல் கனிமொழி, ஏழுமலை, உள்ளிட்டஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், திமுக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் கிளை கழக செயலாளர் நீலகண்டன் நன்றி கூறினார்.

### வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் - தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில்

## நிலையான வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி போர் பாதுகாப்பு ஒத்திகைப் பயிற்சி!

### மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் - காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் பங்கேற்பு!

*தூத்துக்குடி, மே 11-*

தூத்துக்குடி மாவட்டம் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய வளாகத்தில் நிலையான வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி போர் பாதுகாப்பு ஒத்திகைப் பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட் ஜான், இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் நேற்று (10.05.2025) மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

மேற்படி, தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய வளாகத்தில் எதிர்பாராத விதமாக ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட துறைகள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து போர் பாதுகாப்பு ஒத்திகைப்பயிற்சி நடைபெற்றது. இதில், துறைமுகத்தில் உள்ள கப்பலில் எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்படும் பட்சத்தில் முதலில் அபாய சங்கு ஒலித்து, போர்க்கால பாதுகாப்பு வழிமுறைகளில் முதற்கட்டமாக அவசர கால அறிவிப்பு வெளியிடப்பட்டதைத்தொடர்ந்து, பாதிக்கப்பட்ட இடத்தில் பணியிருந்த தொழிலாளர்கள் அங்கிருந்த கூடுகை இடத்திற்கு சென்றவுடன் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் துறைமுக தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைத்து,


கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது, தொடர்ந்து, விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களை தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை வீரர்கள் மீட்டு, துறைமுக ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவத்துறை ஆம்புலன்ஸ் மூலமாக தூத்துக்குடி துறைமுக மருத்துவமனைக்கு முதலு தவிக்காகவும், மேல்சிகிச்சைக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்வது, மேலும், கூடுகை இடத்தில் இருக்கும் துறைமுக தொழிலாளர்களை அங்கிருந்து பதற்றமின்றி பாரத சாரணர் மற்றும் சாரணியர் இயக்கம், மாணவர் படை, சேவை திட்ட தன்னார்வலர்கள் மூலமாக பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்வது, பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதியில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை வீரர்கள் தேடுதல் பணியில் ஈடுபட்டு, வேறு எவரேனும் பாதிக்கப்படவில்லை என உறுதி அளிப்பது, மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை, காவல்துறை மூலமாக பாதுகாப்பு வழங்கப்படுவது உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், பாதிப்பு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது உறுதி செய்யப்பட்டவுடன், மாவட்ட ஆட்சித்தலைவரால் உரிய அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இதேபோன்று, தூத்துக்குடி அனல் மின் நிலைய வளாகத்தில் எதிர்பாராத விதமாக ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட துறைகள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து போர் பாதுகாப்பு ஒத்திகைப்பயிற்சி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஆர்.ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அவசர கால செயல்பாட்டு மையம் இந்த ஒத்திகை பயிற்சியினை ஒருங்கிணைத்து, காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்,

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, மத்திய தொழில் துறை பாதுகாப்புப் படை, பாரத சாரணர் மற்றும் சாரணியர் இயக்கம், மாணவர் இயக்கம், சேவை திட்ட தன்னார்வலர்கள் மற்றும் மருத்துவக் குழுக்கள் பங்கேற்றனர்.

ஒத்திகையின் இறுதியில், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம் தேவையான அனைத்து வசதிகளுடன் பாதுகாப்பாக உள்ளது என உறுதிசெய்யப்படுகிறது.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. பஞ்சமாதேவி, ப.வில்லியனூர் ஊராட்சியில், புதிய நியாய விலை கடை கட்டிடத்தை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் VG.பிரபாகரன், ஒன்றிய குழு பெருந்தலைவர் R.S.வாசன், குப்புசாமி, மணிகண்டன், ஊராட்சி மன்ற தலைவர் கனகராஜ், பாலகிருஷ்ணன், செந்தில்குமார், தயாநிதி, ராமானுஜம், பாலாஜி, முருகையன், சேகர், சீனுவாசன், நாகமணி, பாட்ஷா, பழனிவேல், சாமிதுரை, சரவணன், விஜயரங்கன், வில்வநாதன், பாஸ்கரன், கார்த்திகேயன், ராஜமாணிக்கம், பீமன், பாபு, கோபால், சுப்பிரமணி, மகளிர் அணி நிர்வாகிகள் சுசிலா, வள்ளி, சுபஸ்ரீ முத்துலட்சுமி, சத்யா, மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.